தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், நந்தனம், சென்னை-600 035.

**செய்தி வெளியீடு எண்04/09** **நாள்:03.05.09**

## ஆவின் பால் விற்பனை விலையில் மாற்றமில்லை-ஆவின்பால் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை

ஆவின் நிறுவனம், சென்னை மாநகரில் நாள்தோறும் சுமார் 10.45 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது. இதில், மாதந்திர பால் அட்டைகள் முலமாக 6.75 இலட்சம் லிட்டரும், தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலம் 0.65 இலட்சம் லிட்டரும், தனியார் மொத்த விற்பனை முகவர்கள் மூலம் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு 3.00 இலட்சம் லிட்டரும் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்னை மாநகரில், சுமார் 3000 க்கு மேற்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளுக்கு ஆவின் மொத்த விற்பனை முகவர்கள் ஆவின் பால் விநியோகம் செய்து வருகிறார்கள்.

ஏற்கனவே, தனியார் பால் பண்ணைகள் விற்பனை செய்யும் பால் விலை, ஆவின் பால் விற்பனை விலையை விட கூடுதலாகவே இருந்து வந்தது. தற்போது, தனியார் பால் பண்ணைகள் விற்பனைசெய்யும் பாலின் விலை மேலும் உயர்த்ததப்பட்ட நிலையில், ஆவின் பால் விலை உயர்த்தப்படவில்லை. இதன் காரணமாகவும், ஆவின் பால் தரமானதகவும் அதேசமயம் விலை குறைவாக இருப்பதினாலும், சில சில்லறை விற்பனையாளர்கள் அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் சட்டத்திற்குபுறம்பாக ஆவின் பாலின் அதிக பட்ச சில்லறை விற்பனை விலையை விட கூடுதலாக விற்பனை செய்வதாக வந்த செய்தியின் அடிப்படையில், அதிகபட்ச விற்பனை விலையை விட கூடுதலாக விற்பனை செய்தால், மொத்த விற்பனை முகவர் உரிமம் ரத்து செய்யப்படும் என்று முகவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். மேலும், அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட கூடுதலாக விற்பது சட்டப்படியாக குற்றமாகும். சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் சில்லறை விற்பனையாளர்கள் மீதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆவின் பால் விற்பனை விலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆவின் விற்பனை செயயும் பல்வேறு வகையான பாலின்

**விற்பனை விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நுகர்வோர்கள், குறிபிட்டுள்ள விலைக்கும் கூடுதலாக கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.**

| **பாலின் வகை** | **அளவு** | **மாதந்திர பால் அட்டை மூலம்** | **அதிகபட்ச சில்லறை விற்பனை விலை**(MRP) |
|---|---|---|---|
| **சமன்படுத்திய பால் (**Toned Milk)- நீல நிற பாக்கெட் | **அரை லிட்டர்**<br>**ஒரு லிட்டர்** | **ரூ.7.90**<br>**ரூ.15.75** | **ரூ.9.00**<br>**ரூ.18.00** |
| **நிலைப்படுத்திய பால் (**Standardised Milk) பச்சை நிறபாக்கெட் | **அரைலிட்டர்** | **ரூ.9.50** | **ரூ.11.00** |
| **நிறைகொழுப்புப் பால் (**Full Cream MILK)-ஆரஞ்சு நிற பாக்கெட் | **அரைலிட்டர்** | **ரூ.10.50** | **ரூ.12.00** |
| **இருமுறை சமன்படுத்திய பால் (**Double Toned MILK)-மசந்தா நிறபாக்கெட் | **அரைலிட்டர்** | **ரூ.7.75** | **ரூ.9.00** |
| **தானியங்கி மற்றும் பிளாஸ்டிக் தொட்டிகள் மூலம்** | **அரைலிட்டர்** | **ரூ.9.25** | **ரூ.10.00** |

**நுகர்வோர்கள் மேற்கண்ட அட்டவணைப்படி ஆவின் பாலுக்காக விலையை செலுத்தி ஆவின் பால் வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**நுகர்வோர்கள் தங்களது புகார் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்க ஆவின் 24 மணி நேர நுகர்வோர் நலன் மற்றும் சேவைப்பிரிவை 1800 425 33 00 (இலவச சேவை) என்ற தொலைபேசி எண்ணில் தொடப்பு கொண்டு தெரிவிக்கலாம்.**

**உதவி பொது மேலாளர் (மக்கள் தொடர்பு)**
**ஆவின்**